செய்தி வெளியீடு எண்:1057 நாள்:08.11.2021

**<u>தமிழ்நாட்டில் தீவிரமடைந்து வரும் வடகிழக்கு பருவமழை – நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது – மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தகவல்</u>**

தமிழ்நாட்டில் கடந்த **24** மணி நேரத்தில், 37 மாவட்டங்களில் மழை பெய்துள்ளது. மாநிலத்தின் சராசரி மழை அளவு 15.62 மி.மீட்டர். சென்னை மாவட்டத்தில் அதிகபட்சமாக 79.13 மி.மீட்டர் பதிவாகியுள்ளது.

வடகிழக்கு பருவமழை 1.10.2021 முதல் 8.11.2021 வரை 347.62 மி.மீ பெய்துள்ளது. இது இயல்பான மழையளவான 241.2 மி.மீட்டரை விட 44 சதவீதம் கூடுதல் ஆகும்.

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, சிவகங்கை, திருநெல்வேலி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், ஆகிய **12** மாவட்டங்களில் இயல்பை விட 60 சதவீதத்திற்கு மேல் மிக அதிகப்படியான மழை பெய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மொத்தம் 169 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, அதற்கான பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது, 48 நிவாரண முகாம்களில், 889 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 1,52,451 உணவுப் பொட்டலங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெருகநகர சென்னை மாநகராட்சியின் 166 தெருக்களில் தேங்கியுள்ள மழை நீர், இராட்சத பம்புகள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது. மழை நீரால் சூழப்பட்டுள்ள 13 சுரங்கப்பாதைகளில், 10 சுரங்கப்பாதைகளில் மழை நீர் வெளியேற்றப்பட்டுள்ளது. எஞ்சிய 3 சுரங்கப்பாதைகளில் மழை நீர் வெளியேற்றும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. சாலைகளில் விழுந்த 75 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது.

15 மண்டலங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை அனைத்துத் துறை அலுவலர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

**நிவாரண முகாம்கள்**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில், 43 குடும்பங்களைச் சார்ந்த 128 நபர்கள் 5 நிவாரண முகாம்களிலும்,
- திருவண்ணாமலை மாவட்டத்தில், 15 குடும்பங்களைச் சார்ந்த 71 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- செங்கல்பட்டு மாவட்டத்தில், 20 குடும்பங்களைச் சார்ந்த 79 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- திருவள்ளூர் மாவட்டத்தில் 9 குடும்பங்களைச் சார்ந்த 36 நபர்கள் 1 நிவாரண முகாமிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**சேத விபரம்**

- கடந்த 24 மணி நேரத்தில், சென்னை, தேனி, மதுரை மாவட்டங்களில் 4 நபர்கள் உயிரிழந்துள்னர். மேலும், 16 கால்நடை இறப்புகள் பதிவாகியுள்ளது. 237 குடிசைகள் பகுதியாகவும், 26 குடிசைகள் முழுமையாகவும் ஆக மொத்தம் 263 குடிசைகள் சேதமடைந்துள்ளன. 65 வீடுகள் பகுதியாகவும், 5 வீடுகள் முழுமையாகவும் ஆக மொத்தம் 70 வீடுகள் சேதமடைந்துள்ளன.

**முக்கிய அணைகள் / நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு மற்றும் உபரி நீர் வெளியேற்றப்படும் விபரம்**

| வ.எண். | அணை / நீர்த்தேக்கத்தின் பெயர் | நீர் இருப்பு (மி.க.அ.) | வெளியேற்றப்படும் உபரி நீர் |
|---|---|---|---|
| 1. | பூண்டி | 3231/2786 | 4848 கன அடி |
| 2. | சோழவரம் | 1081/908 | 1200 கன அடி |
| 3. | செங்குன்றம் (புழல்) | 3300/2916 | 2148 கன அடி |
| 4. | செம்பரம்பாக்கம் | 3645/2942 | 2104 கன அடி |
| 5. | வீராணம் | 1456/894 | 434 கன அடி |
| 6. | தேர்வாய் கண்டிகை | 500/500 | 90 கன அடி |

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 7.11.2021 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேச கடலோரத்தின் மேற்கு மத்திய மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் வளி மண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாகவும், சுமத்திரா கடற்கரையின் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் மத்திய இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிலவும் வளி மண்டல மேலடுக்கு

சுழற்சியின் காரணமாகவும், தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை 9.11.2021 அன்று உருவாகும் என்றும், இது வலுவடைந்து மேற்கு வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வடதமிழகத்தின் கடற்கரையை நோக்கி நகரும் என்றும், இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாட்டின் ஒரு சில பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும், வட கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடல் பகுதியில், பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் 9.11.2021 முதல் 12.11.2021 வரை வங்கக் கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பேரிடர்களின் போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு, தேசிய பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் மதுரைக்கும், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திற்கு தலா ஒரு குழுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அனைத்து விதமான தேடல் மற்றும் மீட்பு உபகரணங்களுடன் தயார் நிலையில் உள்ளது. தீயணைப்புத் துறைக்கு சுவர் இடிந்து விழுந்தது, மழை நீர் சூழ்ந்தது, பாம்புகள் தென்பட்டது, மரம் விழந்தது, வாகனங்கள் மழை நீரில் சிக்கிக் கொண்டது போன்ற 261 புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீன்வளத் துறை மூலம் 90 படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம், மாவட்டங்களில் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் முறையே **1070** மற்றும் **1077** என்ற கட்டணமில்லா தொலைபேசியுடன், கூடுதலான அலுவலர்களுடன் 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களுக்கு பொதுமக்கள் **1913** என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

பொதுமக்கள் TNSMART இணையதளத்திலும், வாட்ஸ் அப் எண் **9445869848** மூலமாகவும் புகார்களை தெரிவிக்கலாம்.

முதல் நிலை மீட்பாளர்களை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தும் பொருட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 5106 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் உள்ளன.

3915 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 2897 JCB கள், 2115 ஜெனரேட்டர்கள், 483 இராட்சத பம்புகள் உள்ளிட்ட தேடல் மற்றும் உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வானிலை முன்னறிவிப்புகளை **மீனவர்களுக்கு** உடனுக்குடன் தெரிவிக்க **21000 உயர் VHF கருவிகளும், 600 செயற்கைகோள் தொலைபேசிகளும், 296 NAVTEX and NAVIC** உபகரணங்களும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் ஹெலிகாப்டர்கள் இறங்குவதற்கு 87 ஹெலிபேட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை தாமதமின்றி வழங்கவும், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரவும், அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும், நிவாரண முகாம்களில் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்கவும், குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவைப்படும் பால், ரொட்டி, உணவு, மருந்துகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும், மழைக்காலங்களில் தொற்று வியாதிகள் / டெங்கு போன்றவை பரவாமல் இருக்கவும், தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிருவாக ஆணையர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம்,**
**சென்னை**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9